**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**
**அசல் வழக்கு எண்.131/2018**
**CNR NO.TNKR090001992018**

1. பெருமாள் (இறப்பு)
2. தங்கவேல்
3. சின்னதுரை
4. இளஞ்சியம்
5. மாரியாயி
6. பானுமதி (Amended as per order in I.A.No.04/2020 Dated.29.03.2021)
7. சுமதி

... **வாதிகள்**

**/எதிர்/**

1. தான்தோன்றி பெருமாள்
2. வீரம்மாள் (இறப்பு)
3. முத்துசாமி, த/பெ.பெருமாள் கவுண்டர்
4. முத்துசாமி, த/பெ.மாரியப்பன்
5. அய்யப்பன் (இறப்பு)
6. சுப்பிரமணி
7. வட்டாட்சியர், குளித்தலை
8. வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை
9. மாவட்ட வருவாய் அலுவலர், கரூர்
10. மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர்
11. தமிழ்செல்வன்
12. கிருத்திகா (Amended as per order in I.A.No.04/2020 Dated.29.03.2021)
13. பழனியம்மாள்
14. மாரியாயி
15. பழனிச்சாமி (Amended as per order in I.A.No.07/2023 Dated.21.09.2023)
16. தனம்
17. ராஜ்குமார்

... **பிரதிவாதிகள்**

இவ்வழக்கு என் முன்பாக 13.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், 4, 11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 5 ம் பிரதிவாதி இறந்து விட்ட படியாலும், 1, 3, 6 மற்றும் 13 முதல் 17 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும் அதன் தொடர் பரிகாரமான 3 முதல் 6 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்து வருவதை இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பட்டா எண்.878 மற்றும் 911ல் தாவா சொத்துக்கள் இடம் பெற்றிருப்பதை நீக்கி வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்டா வழங்கிட 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்

1) தாவா சொத்தான கல்லடை கிராமம் சர்வே எண்.212/2010 ஆதியில் வள்ளியம்மை என்பவருக்கு பாத்தியப்பட்டது. வள்ளியம்மை மேற்படி சொத்தை 21.11.1930ல் முருகாயி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். முருகாயி அம்மாள் மேற்படி சொத்தை அனுபவமும், சுவாதீனமும் செய்து வந்து மேற்படி சொத்து குறித்து எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தாமல் 1983ல் இறந்து விட்டார். அவரது கணவரும் 40 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். முருகாயிக்கு முத்துச்சாமி, குட்டியப்பன், வீரம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள். இதில் முத்துச்சாமி 28 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார். அவருக்கு 1ம் பிரதிவாதி மட்டும் வாரிசு ஆவார்.

2) குட்டியப்பன் 1998 ல் இறந்து விட்டார். அவருக்கு 1 முதல் 4 வாதிகள் வாரிசுகள். இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி முருகாயின் மகள். முருகாயி இறந்த பின்னிட்டு அவரது மகனான முத்துச்சாமி மற்றும் குட்டியப்பன் இருவரும் அவரது சொத்தை தென்வடலாக பிரித்து அனுபவம் செய்து வந்தனர். அதன் அடிப்படையில் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது சர்வே எண்.212/10 என்பது சர்வே எண்.212/10A முதல் சர்வே எண்.212/10G வரை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. இதில் சர்வே எண்.212/10A மற்றும் 212/10E முத்துச்சாமி பெயரிலும், சர்வே எண்.212/10B மற்றும் 212/10F குட்டியப்பன் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது.

3) சர்வே எண்.212/10C குட்டியப்பன், முத்துச்சாமி இருவர் பெயரிலும் கூட்டாக உள்ளது. சர்வே எண்.212/10D மற்றும் 212/10G ஆகிய உட்பிரிவுகள் தவறாக 3 முதல் 5 பிரதிவாதிகளின் பட்டாக்களில் இடம் பெற்றுள்ளது. ஆனால் மேற்படி நிலத்தின் அனுபவம் ஆனது வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளால் கூட்டாக செய்யப்படுகிறது. சர்வே எண்.212/10 க்கு மேற்குப்புறம் சர்வே எண்.212/9 என்ற இடமும் கிழக்குப்புறம் சர்வே எண்.212/11 என்ற இடமும் உள்ளது. சர்வே எண்.212/9–3 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.212/11–4,5 பிரதிவாதிகளின் தகப்பனார் மாரியப்பனுக்கு பாத்தியப்பட்டது.

4) 3 முதல் 5 பிரதிவாதிகளின் பட்டா எண்.911 மற்றும் 878 ல் சர்வே எண்.212/10D மற்றும் 212/10G தவறாக இடம் பெற்றுள்ளது. மேற்படி நிலங்கள் வாதிகளின் அனுபவத்திலேயே உள்ளது. 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும், மேற்படி சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும், பாத்தியமும் இல்லை. மேற்படி தவறான பதிவுகள் குறித்து வாதிகளுக்கு தற்போது தான் தெரிய வந்தது. உடனடியாக கரூர் மாவட்ட ஆட்சியரிடம் மேற்படி பட்டாவை ரத்து செய்யக்கோரி மனு அளிக்கப்பட்டு அதன் பேரில் குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் விசாரணைக்கு அனுப்பப்பட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் நிலுவையில் இருந்து வருகிறது.

5) மேற்படி பட்டாவில் தவறாக பெயர் உள்ளதை பயன்படுத்திக் கொண்டு 3 முதல் 5 பிரதிவாதிகள் வாதிகளுக்கு இடையூறு கொடுக்கும்

எண்ணத்தில் அவ்வப்போது வீண் தகராறு செய்து வருகின்றனர். இதனை வாதிகள் சிரமத்துடன் தடுத்து வருகின்றனர். 20.06.2018 அன்று 6ம் பிரதிவாதியோடு சேர்ந்து கொண்டு 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள முள் வேலியை அகற்ற முயற்சித்தனர். இதனை வாதிகள் தடுத்து விட்டனர். எனவே தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் பட்டா எண்.878 மற்றும் 911ல் தாவா சொத்துக்களை நீக்கி வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்டா வழங்கிட 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

6) இவ்வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் வாதி இறந்து விட்டதால் 5 முதல் 7 வாதிகள் அவரின் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். அதே போல 5ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவரது வாரிசுகள் 11, 12ம் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். 2ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகள் 13 முதல் 17 வரையிலான பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**<u>4, 5ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்து 11 மற்றும் 12ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>**

7) இவ்வழக்கு தேவையில்லாத வழக்கு மூலத்தை சேர்த்து இருப்பதாலும், தேவையான தரப்பினரை சேர்க்காததாலும் பாதிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து ஆதியில் வள்ளியம்மை என்பவருக்கு பாத்தியப்பட்டதாக சொல்வது பொய்யாகும். 21.11.1930ல் முருகாயி அம்மாள் விலைக்கு வாங்கியதாக சொல்வதும், அவருக்கு பின்னிட்டு வாதிகளும், 1, 2 பிரதிவாதிகளும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதாக செல்வதும் பொய்யான சங்கதிகள் ஆகும். வழக்குரை பத்தி 6 மற்றும் 7ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது.

8) சர்வே எண்.212/10G இப்பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது. ஆண்டியப்பன், செந்தா கவுண்டர் இருவரும் சகோதரர்கள். ஆண்டியப்பன் மனைவி வள்ளியம்மை. செந்தா கவுண்டர் மனைவி கருப்பாயி. ஆண்டியப்பனுக்கு முருகாயி, ராக்காயி, முத்தம்மாள், பழனியம்மாள், வீரம்மாள் மற்றும் சிட்டு ஆகியோர்கள் வாரிசுகள்.

முத்தம்மாளுக்கு ரெங்கசாமி, சங்கபிள்ளை இருவரும் வாரிசுகள். முருகாயிக்கு முத்துச்சாமி, குட்டியப்பன் மற்றும் வீரம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள். 1ம் பிரதிவாதியும், ராசம்மாள் என்பவரும் முத்துச்சாமியின் வாரிசுகள். செந்தா கவுண்டர் மற்றும் கருப்பாயிக்கு பட்டாயி என்ற மகள். அவர் ஆலத்தூர் முத்துச்சாமி என்பவரை திருமணம் செய்து கொண்டு மாரியப்பன், வள்ளியம்மை, பழனியப்பன் மற்றும் பழனியம்மாளை குழந்தைகளாக பெற்றனர்.

9) சர்வே எண்.212/10A முதல் 212/10G, 212/11A மற்றும் 212/11B ஆகியவை ஆண்டியப்பன் மற்றும் செந்தா கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. இருவரும் நீண்ட வருடத்திற்கு முன்பு இறந்து விட்டனர். அவரது மனைவிகள் வள்ளியம்மை, கருப்பாயி மேற்படி சொத்துக்களை அனுபவித்து வந்து வாய் மொழியாக பாகம் பிரித்துக் கொண்டதில் சர்வே எண்.212/10A, 10B, 10D, 10E மற்றும் 10F ஆகியவை வள்ளியம்மை பாகத்திற்கும், சர்வே எண்.212/11A, 10G ஆகியவை கருப்பாயி பாகத்திற்கும் ஒதுக்கப்பட்டது.

10) சர்வே எண்.212/10C கிணற்று பாகம் ஆகும். அது வள்ளியம்மை மற்றும் கருப்பாயி ஆகியோரால் பொதுவாக அனுபவிக்கப்பட்டு வருகிறது. சர்வே எண்.212/11B ல் ஒரு கோவில் கட்டிடம் உள்ளது. அதுவும் பொதுவில் வைத்து அனுபவம் செய்து வரப்படுகிறது. சர்வே எண்.212/11A மற்றும் 212/10G கருப்பாயின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ள பகுதியாகும். அதை அவரது மகள் பட்டாயிம், கணவர் ஆலத்தூர் முத்துச்சாமி இருவரும் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகின்றனர். அவர்கள் இறந்த பின்னிட்டு இப்பிரதிவாதிகள் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்து வருகின்றனர்.

11) மாரியப்பன் இறந்த பின்னிட்டு இப்பிரதிவாதிகள் சர்வே எண்.212/11A மற்றும் 212/10 ல் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருகின்றனர். தற்போது சர்வே எண்.212/10C மற்றும் 11B ஆகியவற்றிலும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளனர். மேற்படி நிலங்களுக்கான பட்டா இப்பிரதிவாதியின் தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை மறைத்து வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலும் தாவா சொத்தானது சர்வே

எண்.212/11 ல் கட்டுப்படாத சொத்தாகும். அது இப்பிரதிவாதிகளின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது.

12) சர்வே எண்.212/10G நிலத்திற்கு இப்பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் பட்டா தவறுதலாக ஏற்பட்டதாக சொல்வது பொய்யானதாகும். மேலும் வாதிகள் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தில் இருந்து வருவதாக சொல்வது பொய்யாகும். பிரதிவாதிகளுக்கு சர்வே எண்.212/10G–ல் எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை. நத்தம் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது பட்டாவில் ஏற்பட்ட தவறு குறித்து வாதிகளுக்கு 05.02.2018 ல் தான் தெரிய வந்தது. வழக்குரையில் சொல்லியுள்ளது போல இப்பிரதிவாதிகள் வாதிகளின் சுவாதீனத்திற்கு எப்போதும் இடையூறு செய்யவில்லை.

13) வழக்குரை பத்தி 10 ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். சர்வே எண்கள்.212/10G மற்றும் 10C இரு நிலங்களிலும் உள்ள சுவாதீனத்தை தடுத்து பிரதிவாதிகள் சுவாதீனம் எடுக்கும் எண்ணத்தோடு செயல்பட்டு வருகின்றனர். வாதிகளுக்கோ, 1, 2 பிரதிவாதிகளுக்கோ தாவா சொத்துக்களில் எவ்வித உரிமையோ, பாத்தியமோ கிடையாது. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

<u>7 ம் பிரதிவாதி தாக்கல் செய்து 8 முதல் 10 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>

14) இப்பிரதிவாதி தனது பதிலுரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை வாதிகளே நிரூபிக்க வேண்டும். 8 முதல் 10 பிரதிவாதிகள் 7 ம் பிரதிவாதியின் உயர் அதிகாரிகள் என்பதால் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்து 7 ம் பிரதிவாதியே வழக்கு நடத்தினார். 21.11.1930 ல் முருகாயி கிரையம் பெற்றதாக சொல்வதையும், பின்னிட்டு முருகாயி அவரது கணவரும் மேற்படி சொத்தை அனுபவம் செய்து வந்து தங்கள் காலத்திற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளுக்கிடையே தற்காலிகமாக தென்வடலாக பிரித்து அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது.

15) பின்னிட்டு சர்வே எண்.212/10 என்பது 212/10A முதல் 212/10G வரை உட்பிரிவு செய்யப்பட்டதாகவும், 212/10D மற்றும் 10G ஆகிய

நிலங்கள் 3 முதல் 5 பிரதிவாதிகளின் பட்டாக்களில் இடம் பெற்றுள்ளது என சொல்வதையும் வாதிகளே நிரூபிக்க வேண்டும். வழக்குரை 7,8 மற்றும் 9 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது. சர்வே எண்.212/10 க்கு மேற்கில் சர்வே எண்.212/9 ம், கிழக்கில் 212/11 உள்ளது. சர்வே எண்.212/10D க்கு பட்டா பெற முயற்சித்ததாகவும், சர்வே எண்.212/10G க்கும் பட்டா பெற ஏற்பாடு செய்தனர். மேற்படி நிலங்களுக்கான பட்டா எண்.878 மற்றும் 911 ஆகியவற்றை தவறுதலாக பிரதிவாதிகள் பெயர் ஏற்றப்பட்டுள்ளது என்பது ஏற்கத்தக்கதல்ல. தாவா சொத்தில் உள்ள முள் வேலிகளை அகற்ற 3 முதல் 6 பிரதிவாதிகள் சட்ட விரோத செயலில் ஈடுபட்டதாக சொல்வது பொய்யாகும். பிரதிவாதிகள் அரசு அலுவலர் என்பதால் அவர்களுக்கு வழக்கிற்கு முன்னிட்டு அனுப்ப வேண்டிய அறிவிப்பு அனுப்பப்படாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென பதிலுரை தாக்கல் செய்துள்ளனர்.

16) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் குடும்பத்தார்களுக்கு பாத்தியப்பட்டது என்பது சரியா? |
| 2. | தாவா சர்வே எண்.212/10D ல் உள்ள சொத்தானது 4, 5, 11 மற்றும் 12 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு வாய்மொழி பாகத்தின் மூலம் கிடைத்ததாக கூறுவது சரியா? |
| 3. | தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 4. | தாவா சொத்துக்களை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 5. | தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| 6. | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன? |

17) வாதிகள் தரப்பில் 2ம் வாதி தங்கவேல் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.2 ஆக 3ம் நபரான சுப்பிரமணி என்பவர் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.13 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 4ம் பிரதிவாதி முத்துசாமி விசாரணை செய்யப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>எழுவினா எண்கள்.1 மற்றும் 2ன் தீர்வு</u>

**தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் குடும்பத்தார்களுக்கு பாத்தியப்பட்டது என்பது சரியா?**

**தாவா சர்வே எண்.212/10D ல் உள்ள சொத்தானது 4, 5, 11 மற்றும் 12 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு வாய்மொழி பாகத்தின் மூலம் கிடைத்ததாக கூறுவது சரியா?**

18) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களும் மற்ற சொத்துக்களும் ஆதியில் வள்ளியம்மை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும் அவரிடம் இருந்து 21.11.1930ல் முருகாயி அம்மாள் சர்வே எண்.212/10ல் 1 ஏக்கர் 11 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றதாகவும், மேற்படி தேதியில் இருந்து முருகாயி அம்மாள் கிரைய சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்ததாகவும், பின்னிட்டு அவர் 1983ம் வருடம் இறந்து விட்டதாகவும் அவருடைய வாரிசுகள் முத்துசாமி, குட்டியப்பன், வீரம்மாள் ஆகியோர்கள் வாய்மொழியாக சொத்துக்களை பிரித்துக்கொண்டு அனுபவம் செய்து வந்ததாகவும், நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது சர்வே எண்.212/10 என்பது சர்வே எண்.212/10A முதல் 10G வரை உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.212/10A மற்றும் 212/10E முத்துச்சாமிக்கும், சர்வே எண்.212/10B, 212/10F குட்டியப்பனுக்கும் பாகம் பிரிக்கப்பட்டது.

19) சர்வே எண்.212/10C முத்துசாமி மற்றும் குட்டியப்பன் பெயரில் கூட்டாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என வாதி தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி வாதத்தை நிரூபிக்க வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு வா.சாஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1–21.11.1930ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை

செய்கையில், முருகாயி அம்மாள் என்பவர் வள்ளியம்மை என்பவரிடம் இருந்து சர்வே எண்.212/10ல் 1 ஏக்கர் 11 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளதாக கண்டுள்ளது. மேற்படி சொத்திற்கான பட்டா எண்.461 என மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20) வாதிகள் தரப்பில் மேற்படி முருகாயி அம்மாளுக்கு முத்துசாமி, குட்டியப்பன் மற்றும் வீரம்மாள் வாரிசுகள் என வாதிடப்பட்டது. வாதிகள் குட்டியப்பனின் வாரிசுகள் என்றும், 1ம் பிரதிவாதி முத்துச்சாமியின் வாரிசு என்றும், 2ம் பிரதிவாதி முருகாயி அம்மாளின் வாரிசு என வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. 1,2 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்ய தகுந்த ஒத்துழைப்பு கொடுக்காததால் அவர்களை 1, 2 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் காட்டியிருப்பதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் 1,2 பிரதிவாதிகள் வழக்கின் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளனர்.

21) வா.சா.ஆ.2–சர்வே எண்.212/10க்கான ரீ செட்டில்மெண்ட் பைசலாதி ரிஜிஸ்டர் உண்மை நகல். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.212/10 ஆனது வள்ளியம்மை மற்றும் கருப்பாயி என்பவர்கள் பெயரில் பட்டா எண்.461 விஸ்தீரணம் 1 ஏக்கர் 11 சென்ட் உள்ளது என மேற்படி ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது.

22) பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஒரு ஆண்டியப்பன் என்பவரும், செந்தா கவுண்டர் என்பவரும் சகோதரர்கள் என்றும், ஆண்டியப்பன் மனைவி வள்ளியம்மை, செந்தா கவுண்டர் மனைவி கருப்பாயி என்றும் மேற்படி நபர்கள் தங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டதில் ஆண்டியப்பனுக்கு சர்வே எண்.212/10A, 10B, 10D, 10E மற்றும் 10F ஆகியவை வாய்மொழி பாகத்தின் மூலம் பிரிக்கப்பட்டது என்றும் சர்வே எண்.212/10G மற்றும் 212/11A ஆகியவை செந்தா கவுண்டருக்கு பாகமாக பிரிக்கப்பட்டதாக வாதிட்டார்.

23) மேற்படி ஆண்டியப்பன், செந்தா கவுண்டர் இறந்த பின்னிட்டு அவரது மனைவிகளான வள்ளியம்மை மற்றும் கருப்பாயி இருவரும் மேற்படி பாக சொத்துக்களில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்ததாகவும் அதன் அடிப்படையில் தாவா சொத்தான சர்வே எண்.212/10G

கருப்பாயி குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என வாதிட்டார். மேற்படி வாதத்திற்கு ஆதரவாக பி.சா.1 விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1– 14.12.1984ம் தேதியிட்ட பட்டா எண்.878. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.212/10G முத்துசாமி மகன் மாரியப்பன் என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டள்ளது என்றும், பி.சா.ஆ.2–அதை உறுதி செய்யும் ஆவணமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

24) பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2ன் அடிப்படையில் கருப்பாயி மகனான முத்துசாமி என்பவரின் மகன் மாரியப்பனுக்கு மேற்படி பட்டா வழங்கப்பட்டுள்ளது என 4, 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் 4, 11, 12 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என வாதிட்டனர். வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வள்ளியம்மை என்பவரிடம் இருந்து முருகாயி அம்மாள் சர்வே எண்.212/10ல் 1 ஏக்கர் 11 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். வள்ளியம்மை, கருப்பாயி என்பவர்கள் ஆண்டியப்பன் மற்றும் செந்தா கவுண்டர் மனைவிகள் என்றும் அவர்கள் தங்களுக்குள்ளாக வாய்மொழி பாகம் ஏற்படுத்திக் கொண்டதாகவும் பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

25) இந்நிலையில் வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.212/10 வள்ளியம்மை மற்றும் கருப்பாயி பெயரில் கூட்டாக பட்டா எண்.461 இருந்தாலும் இருவரும் ஏற்படுத்திக் கொண்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் வள்ளியம்மை மட்டும் தனக்கு பிரிந்த பாக சொத்தான சர்வே எண்.212/10ன் நிலத்தை முருகாயி அம்மாளுக்கு விற்பனை செய்துள்ளார் என வாதிகள் தரப்பில் வாதிட்டனர். பிரதிவாதிகள் கூற்றின் படி வாதிகள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாகவே உள்ளது.

26) வள்ளியம்மை மற்றும் கருப்பாயி இருவரும் வாய்மொழி பாகத்தை 1930ம் வருடத்திற்கு முன்பே ஏற்படுத்தியுள்ளார் என்பதை வா.சா.ஆ.1ன் மூலம் அறிய முடிகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.212/10ல் உள்ள முழு விஸ்தீரணமான 1 ஏக்கர் 11 சென்ட் நிலத்தை முருகாயி அம்மாள் கிரையம் பெற்றுள்ளார். உண்மையில் சர்வே எண்.212/10ல் உட்பிரிவு எண்.212/10G கருப்பாயிக்கு பாகம்

ஒதுக்கப்பட்டிருந்தால் அவர் பெயரில் சர்வே எண்.212/10G க்கான பட்டா ஏற்பட்டிருக்கும். அவ்வாறு எந்த ஒரு ஆவணத்தையும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் சர்வே எண்.212/10C பொதுக்கிணறு என்றும் அது பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக பட்டா இருப்பதாக பதிலுரையில் கூறியுள்ளனர். ஆனால் 212/10C க்கான பட்டா முத்துசாமி மற்றும் குட்டியப்பன் பெயரில் கூட்டாக உள்ளது என்பதை வா.சா.ஆ.7 மூலம் அறிய முடிகிறது.

27) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.4–சர்வே எண்.212/10A, 212/10E க்கான பட்டா எண்.918 முத்துச்சாமி என்பவர் பெயரில் உள்ள கணினி நகல். இதில் 0.20.00 ஹெக். நிலமானது பழனியாண்டி மகன் முத்துசாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.5–சர்வே எண்.212/10F ல் 0.2.50 ஹெக். நிலமானது பழனியாண்டி மகன் குட்டியப்பன் பெயரில் பட்டா எண்.2181 தாக்கலாகி உள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.6–சர்வே எண்.212/10B விஸ்தீரணம் 0.14.50 ஹெக். பட்டா எண்.298 பழனியாண்டி மகன் குட்டியப்பன் என்பவர் பெயரில் தாக்கலாகி உள்ளது.

28) வா.சா.ஆ.7–சர்வே எண்.212/10C, பட்டா எண்.1331 பழனியாண்டி மகன் முத்துசாமி மற்றும் குட்டியப்பன் பெயரில் கூட்டு பட்டாவாக தாக்கலாகி உள்ளது என்பதை அறிய முடிகிறது. சர்வே எண்.212/10D தாவா சொத்திற்கான பெருமாள் கவுண்டர் மகன் முத்துசாமி அதாவது 3ம் பிரதிவாதி பெயரில் பட்டா தவறுதலாக ஏற்பட்டுள்ளது என்றும், சர்வே எண்.212/10G–க்கு மாரியப்பன் மகன் முத்துசாமி 4ம் பிரதிவாதி பெயரில் பட்டா தவறுதலாக ஏற்பட்டுள்ளது என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது.

29) மேலும் சர்வே எண்.212/10ன் உட்பிரிவுகள் அனைத்தையும் சேர்த்ததால் தான் ஒரு ஏக்கர் 11 சென்ட் நிலமானது வருகிறது என்றும் மேற்படி ஒரு ஏக்கர் 11 சென்ட் நிலத்தை முருகாயி வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்று இருந்ததாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதிகள் தரப்பில் வாதிடுவது போல் சர்வே எண்.212/10ன் உட்பிரிவுகளில் சர்வே எண்.212/10Dம், சர்வே எண்.212/10Gம் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

30) பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பட்டாக்களின் படி பாத்தியப்பட்டது என்றும், அதை தாங்கள் அனுபவம் செய்து வருவதாக பி.சா.ஆ.3 வரி இரசீதுகள் தாக்கல் செய்துள்ளனர். பி.சா.ஆ.3 ல் 2001, 2007 மற்றும் 2008 க்கான வரி இரசீதுகள் பட்டா எண்.878 க்கு செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவானது பிரதிவாதிகளின் இதர சொத்துக்களுக்கும், தாவா சொத்திற்கும் சேர்த்து பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது.

31) மேலும் வாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சர்வே எண்.212/10 ல் உள்ள முழு விஸ்தீரணத்தையும் தங்களது முன்னோரான முருகாயி கிரையம் பெற்றிருப்பதாகவும், அவரது கிரையத்திற்கு பின்னிட்டு தாவா சொத்துக்களில் எந்த வித வில்லங்க பதிவும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் எனவே வா.சா.1 ன் படி சர்வே எண்.212/10 ல் உள்ள அனைத்து சொத்துக்களும் வாதிகளுக்கே பாத்தியம் என வாதிட்டார்.

32) பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அன்னியர்கள் என்றும், அவர்களுக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், 3, 4 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்திற்கான பட்டா தவறுதலாக ஏற்பட்டதை பயன்படுத்திக் கொண்டு 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் வில்லங்க பாராதீனம் செய்ய ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகவும், எனவே 3, 4 பிரதிவாதிகளை சட்டப்படி தடை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

33) வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்களான சர்வே எண்.212/10D மற்றும் 212/10G ஆகியவை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் முருகாயி அம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதிடப்பட்டது.

34) பிரதிவாதிகள் தரப்பில் சர்வே எண்.212/10D–4, 5, 11, 12 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டு தங்களுக்கு கிடைத்ததாக வாதிட்டனர். ஆனால் மேற்படி வாதத்தை நிரூபிக்க பிரதிவாதிகள் தங்கள் பெயரிலோ அல்லது முன்னோர்கள் பெயரிலோ எந்த விதமான உரிமை ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எனவே

பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் தங்களுக்கு பாத்தியப்பட்டது என கூறுவது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் குடும்பத்தார்களுக்கு பாத்தியப்பட்டது என வாதிகள் ஆவணங்களின் அடிப்படையில் நிரூபித்துள்ளனர் என மேற்படி எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறேன்.

<u>எழுவினா எண்கள்.3 மற்றும் 4 ன் தீர்வு</u>

**தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**

**தாவா சொத்துக்களை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**

35) தாவா சொத்துக்களான பட்டாவானது 3, 4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் வாதிகளின் சுவாதீனத்திற்கு இடையூறு கொடுப்பதாகவும் வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

36) நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தான சர்வே எண்.212/10F–ல் ஒரு தேவாலயமும், அதன் மேல் தளத்தில் ஒரு வீடும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி வீட்டின் மாடிப்படியானது சர்வே எண்.212/10G ல் உள்ளதாக குறிப்பிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதனை ஒத்தே நில அளவையரும் தனது வரைபடத்தை தாக்கல் செய்துள்ளார். இது குறித்து வாதிகள் தரப்பிலும், பிரதிவாதிகள் தரப்பிலும் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

37) மேற்படி ஆட்சேபனையில் தாவா சொத்துக்களின் நான்கெல்லை விபரங்களை குறிப்பிடவில்லை என்றும், சர்வே எண்.212/10F மற்றும் 212/10G ஆகிய இரண்டு நிலங்களும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் இரண்டு நிலங்களும் சேர்த்து தாங்கள் அனுபவித்து வருவதாகவும் ஆனால் சர்வே எண்.212/10G ல் வாதிகள்

நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார்கள்.

38) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் சர்வே எண்.212/10G ல் மாடிப்படிகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது தவறு என ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையர் வரைபடத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், சர்வே எண்.212/10G-ல் தேவலாயத்தின் படிக்கட்டுகள் உள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும் இது குறித்து பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "சர்ச் உள்ள இடம் சர்வே எண்.10G என்றால் சரிதான். சர்ச்சில் கீழே ஜெபக் கூடம் மேலே தங்கவேலும் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்" என ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

39) மேலும் இவர் "சர்வே எண்.212/10D மற்றும் 10G ல் தவறுதலாக என் தந்தை பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை மாற்ற கோரி மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார். "சர்வே எண்.10 ற்கு மேற்கே சர்வே எண்.9 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.9 ன் பட்டாதாரர் பெயர் தெரியுமா என்றால் அவர் பெயர் முத்துசாமி. மேற்படி முத்துசாமிக்கு சர்வே எண்.10 ல் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சர்வே எண்.10D ல் முத்துசாமி பெயர் தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என வழக்குரையில் சொல்லியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.10 ற்கு முத்துச்சாமிக்கு பட்டா வழங்கப்பட்டிருப்பது தவறு என்றால் அது பற்றி தெரியாது" என சாட்சியம் அளித்துள்ளார்.

40) மேற்படி சாட்சியத்தில் இருந்து சர்வே எண்.212/10G–ல் கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது என்பதும் அதன் மேல் தளத்தில் வாதி தங்கவேல் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்பதையும் பி.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் இருந்து சர்வே எண்.212/10F மற்றும் 212/10G இரண்டும் வாதிகளின் நிலம் என்பதால் 2 நிலங்களும் சேர்த்து தேவாலயம் மற்றும் வீடு கட்டியிருப்பதாக வாதிகள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது.

41) மேலும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளின் முன்னோர்களான முருகாயி அம்மாள் தாவா சொத்துக்களையும், அதனுடன் உள்ள மீதி சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பட்டாக்கள் 3, 4 பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயரில் இருப்பதை பயன்படுத்தி பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதியின் சுவாதீனத்திற்கு இடையூறு கொடுப்பதாக வாதிகள் தரப்பில் வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது.

42) மேலும் ஒரு நபரின் பெயரில் உரிமை ஆவணங்கள் உள்ள நிலையில் மற்றொரு நபருக்கு அதே சொத்து குறித்து பட்டா ஏற்பட்டிருப்பின் உரிமை ஆவணங்கள் உள்ள நபரே அந்த சொத்தின் உண்மையான உரிமையாளர் ஆவார். பட்டா என்பது ஒரு நபருக்கு உரிமையை கொடுக்காது. எனவே வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் குடும்பத்தார்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தாவா சொத்துக்கள் பொறுத்து வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரமானது அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன். மேலும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 பட்டாக்களின் அடிப்படையில் 3 முதல் 6 பிரதிவாதிகள், வாதிகளுக்கு இடையூறு கொடுப்பதாக வாதிகள் தரப்பில் வாதிட்டுள்ள நிலையில் வாதிகள் அவர்களுக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பெற உரிமை உள்ளது என மேற்படி எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறேன்.

**<u>எழுவினா எண்.5 – ன் தீர்வு</u>**

**தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகள் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?**

43) வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களின் பட்டாவானது 3 முதல் 6 பிரதிவாதிகளின் குடும்பத்தார் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றும் தாவா சொத்துக்கள் வாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் மேற்படி பட்டாவில் இருந்து தாவா சொத்தினை நீக்கம் செய்து வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் பெயர்களுக்கு தனியாக பட்டா வழங்கிட வேண்டுமென 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர்.

44) பட்டா பாஸ் புத்தகம் சட்டம் பிரிவு 14ன் படி உரிமையியல் நீதிமன்றமானது ஒரு பட்டாவில் உள்ள பதிவினை மாற்றவோ அல்லது நீக்கம் செய்யவோ அல்லது சேர்க்கவோ உரிமையியல் நீதிமன்றத்திற்கு உத்தரவிட அதிகாரம் இல்லை என வரையறுத்துள்ள நிலையில் இந்நீதிமன்றத்திற்கு வாதிகள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை வழங்க அதிகாரம் இல்லை என மேற்படி சட்டத்தின் கீழ் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வாதிகள் 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பெற அருகதை அற்றவர்கள் என முடிவு செய்து மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

<u>**எழுவினா எண்.6 –ன் தீர்வு**</u>

**வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

45) வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்துள்ள நிலையில் வாதிகளுக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.6 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு 3 முதல் 6 மற்றும் 11 முதல் 17 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்து செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 17ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2026.03.17 06:36:08 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 தங்கவேல் (2ம் வாதி)

வா.சா.2 சுப்பிரமணி (3ம் நபர்)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.11.1930 | முருகாயி அம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | வள்ளியம்மை பெயரில் உள்ள தாவா சொத்திற்கான செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | – | வம்சா வழிபட்டியல் | அசல் |
| வா.சா.ஆ.4 | – | முத்துசாமி பெயரில் உள்ள பட்டா எண்.918 | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | – | குட்டியப்பன் பெயரில் உள்ள பட்டா எண்.2181 | கணினி நகல் |
| வா.சா.ஆ.6 | – | குட்டியப்பன் பெயரில் உள்ள பட்டா எண்.298 | கணினி நகல் |
| வா.சா.ஆ.7 | – | முத்துசாமி மற்றும் குட்டியப்பன் பெயரில் உள்ள கூட்டுபட்டா எண்.1331 | கணினி நகல் |
| வா.சா.ஆ.8 | – | வழக்கு சொத்திற்கான பழைய புலபடம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.9 | – | வழக்கு சொத்திற்கு யுடிஆர்க்கு பின்னர் ஏற்பட்ட புலப்படம் | கணினி நகல் |
| வா.சா.ஆ.10 | – | 3ம் பிரதிவாதி முத்துசாமி பெயரில் உள்ள பட்டா எண்.911 | கணினி நகல் |
| வா.சா.ஆ.11 | – | 4 மற்றும் 5 பிரதிவாதிகளின் தந்தை மாரியப்பன் பெயரில் உள்ள பட்டா எண்.878 | கணினி நகல் |
| வா.சா.ஆ.12 | – | தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டு வரி இரசீதுகள் (எண்ணிக்கை 07) | அசல் |
| வா.சா.ஆ.13 | – | சுப்ரமணி ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

பி.சா.1 முத்துசாமி (4 ம் பிரதிவாதி)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 10.12.1984 | அறிவிப்பு | சார்வு நகல் |
| பி.சா.ஆ.2 | 14.12.1984 | பட்டா எண்.878 | உண்மை நகல் |
| பி.சா.ஆ.3 | – | தீர்வை இரசீதுகள் (3 எண்ணிக்கை) | அசல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | – | நீதிமன்ற ஆணையர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | – | நீதிமன்ற ஆணையர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.3 | – | நில அளவையர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.4 | – | வாதி தாக்கல் செய்த ஆட்சேபணை | அசல் |
| நீ.ம.சா.ஆ.5 | – | 4, 11, 12 ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்த ஆட்சேபணை | அசல் |

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.17 06:36:14 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

***********************************

**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.131/2018**

**D.D.17.03.2026**

**AFT**

********************************